பக்கங்கள்:-15

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 15 | திங்கட்கிழமை | 27.01.2025 | அதிர்வு 178

## யாழ். வருகின்றார் ஜனாதிபதி அநுர



ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எதிர் வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார். இதன்போது 05



### யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் செயற்பாடுகளில் அதிருப்தி

# கலைப்பீட பீடாதிபதி ரகுராம் பதவி விலகல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் தாம் அந்தப் பதவியில் விலகியுள்ளார் என்று திடீரென அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்துக்குள் மாணவர்கள் சிலரின் தவறான செயற்பாடுகளைக் கண்டித்து மாணவ, மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் பல்கலைக்கழக நிர்வாகத்தில் ஏற்பட்ட அதிருப்தியால் கலைப் பீட பீடாதிபதி பதவியில் இருந்து பேராசிரியர் சி.ரகுராம் விலகியுள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது. 06

## மீண்டும் கலைப்பீட பீடாதிபதியாக ரகுராம் நியமிக்கப்படும் வரை சாத்வீகப் போராட்டம்

### யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் அதிரடி அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் எந்த அடிப்படையில் அந்தப் பதவியில் இருந்து விலகினாரோ அந்த விடயத்துக்காக உயர்ந்த கௌரவத்தோடும், என்ன விடயத்துக்காகப் பாடுபட்டாரோ அந்த விடயத்துக்கான வெற்றியோடும் மீளவும் கலைப்பீட பீடாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும்." – என்று யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. 05







புதிய அரசமைப்பை உருவாக்கும் விடயம் தொடர்பான விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒரு நிலைப்பாட்டில் கொண்டுவரும் முயற்சியாக அந்தக் கட்சிகளிடையே இன்று ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இன்றைய சந்திப்பையும் திகதி வரையறை குறிப்பிடாது தள்ளிப் போட்டிருப்பதாக அறிய வருகிறது.

இந்தச் சந்திப்பு முதலில் நேற்று முன்தினம் நடைபெறுவதாக இருந்து பின்னர் இன்றைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

ஆயினும், இந்தக் கூட்டம் தொடர்பில் ஒரு தீர்மானத்தைத் தமிழரசுக் கட்சி எடுப்பதற்கு வசதியாக அதுவரையில் இக்கூட்டத்தை தள்ளிப் போட தமிழ் தேசிய மக்கள் முன்னணி தீர்மானித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 05



# நெல்லுக்கான உத்தரவாத விலையை அரசாங்கம் அறிவிக்காமையால் விவசாயிகள் அளெசகரியம்

பெரும்போகத்திற்கான நெல் அறுவடை பல மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கம் நெல்லுக்கான உத்தரவாத விலையை அறிவிக்காமையினால், தாங்கள் மிகவும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், அரசாங்கத்தின் நெல்லை கொள்வனவு செய்யும் வேலைத் திட்டமும் இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அரசாங்கம் நெல்லை கொள்வனவு செய்வதில் ஏற்பட்டுள்ள தாமத்தினால் தங்களது அறுவடைகளை குறைந்த விலையில் தனியார் துறையினருக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலைமை உருவாகியுள்ளதாக விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில், அறுவடை செய்யப்பட்ட நெல்லை கொள்வனவு செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக விவசாயிகள் பாரிய சிரமங்களை எதிர்நோக்குவதாக விவசாய சங்கங்கள் குறிப்பிடுகின்றன.

# அண்மைக்கால துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பில் 84 பேர் கைது




## பொலிஸ் பேச்சாளர் தகவல்

நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்படுகின்ற குற்றத் தடுப்பு விசேட சோதனை நடவடிக்கைகளில், குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 249 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 4,020 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில்நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கடந்த நாள்களில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய 84 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம் 3 – டி56 ரக துப்பாக்கிகளும் 5 கைத்துப்பாக்கிகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



# ரயில் பயணசீட்டை அதிக விலைக்கு விற்பனை செய்த ஆட்டோ சாரதி கைது

ரயில் இலத்திரனியல் பயணச்சீட்டினை அதிக விலைக்கு விற்பனை செய்த ஆட்டோ சாரதி ஒருவர் கண்டி குற்றவியல் விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் கண்டியில் இருந்து பதுளை வரையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் ரயிலுக்கு வழங்கப்படும் 4,000 ரூபா பெறுமதியான இலத்திரனியல் பயணச்சீட்டினை பிரித்தானியப் பெண் பிரஜைகள் இருவருக்கு 27,000 ரூபாவிற்கு விற்பனை செய்துள்ளார்.

சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள சாரதி ஒருவர் இந்த பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்துள்ளதுடன், அதனை ஆட்டோ சாரதியின் ஊடாக பிரித்தானிய பெண் பிரஜைகளுக்கு விற்பனை செய்துள்ளார் என பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில் தெரியவந்துள்ளது.

அவ்வாறான மோசடி சம்பவங்களில் ஈடுபட்ட 5 சந்தேகநபர்கள் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சோதனைகளுக்கமைய 23, 953 வழக்குகள்



2024 ஆம் ஆண்டில் நுகர்வோர் விவகார அதிகாரசபை முன்னெடுத்த சோதனைகளுக்கமைய, 23, 953 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் நீதவான் நீதிமன்றங்களால் 207 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் கடந்த ஆண்டில் 24 ,761 சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் அதிக கட்டணம் வசூலித்தல், தயாரிப்பு தகவல்களை தவறாக சித்தரித்தல், விலைகளை காட்சிப்படுத்த தவறியமை, மின் சாதனங்களுக்கு உத்தரவாதங்களை வழங்காதமை மற்றும் நியாயமற்ற சூழ்நிலையில் பொருட்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

# மன உளைச்சலுக்கு உள்ளான பெண் தனக்குத் தானே தீ மூட்டி உயிர்மாய்ப்பு

(எஸ்.ரகுதீஸ்)

யாழ்ப்பாணத்தில், மன உளைச்சலுக்கு உள்ளான வயோதிபப் பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து தனக்குத் தானே தீ வைத்து உயிர்மாய்த்துள்ளார்.

சுன்னாகம் கிழக்கு, குமாரசுவாமி புலவர் வீதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு மங்களநாயகி (வயது 80) என்ற வயோதிப பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் பிள்ளைகள் வேலைகளுக்குச் செல்வதனால் அவர் பெரும்பாலான நேரங்களில் தனிமையில் இருந்துள்ளார். இதனால் மன உளைச்சலுக்கு உள்ளாகிய நிலையில் நேற்றுமுன்தினம் இரவு வீட்டுக்கு அருகேயுள்ள வாழைத்தோட்டத்துக்குச் சென்று, மண்ணெண்ணெய்யைத் தன் மீது ஊற்றி தீ மூட்டி உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.



சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.




# காலி சிறைக்குள் மோதல்! கைதிகள் நால்வர் காயம்!!

காலி சிறைச்சாலையில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் கைதிகள் நால்வர் காயமடைந்துள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

காயமடைந்த 4 பேரும் சிகிச்சைக்காகக் காலி தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிலைமையைக் கட்டுப்படுத்தப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டனர்.



# மறைந்த ரவி பொன்னுத்துரைக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினர் அஞ்சலி

யாழ்ப்பாணம் வைற் ஹவுஸ் மண்டபத்தில் நேற்று ஈ.பி. ஆர்.எல்.எவ். கட்சியினர் தமது தோழரான கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற ரவி பொன்னுத்துரைக்கு அதன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் அஞ்சலி செய்தனர்.

ரவி பொன்னுத்துரை “வைகறை” இதழின் ஆசிரியாராகவும், சுற்றுச் சூழல் ஆர்வலராகவும் அதற்காக சர்வதேச நாடுகளுடனும் உறவைப் பேணுபவராகவும் தாயகத்தில் மரம் நடுகை, வீட்டுத் தோட்டம் போன்ற விடயங்களில் பல்கலைக் கழக, பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்துவதிலும் ஆர்வம் கொண்டவராக விளங்கினார்.

இவற் வைகறை ரவி என இலக்கியவட்டத்தில் அறியப்பட்டாலும் ஹெரஸ் ரவி என்றே கட்சித் தோழர்களால் அழைக்கப்பட்டார்.

அதன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் நடந்த அஞ்சலி நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் கலந்துகொண்டு அஞ்சலி உரையாற்றினர்.

அவரது பூதவுடல் நேற்று மாலை வரை அவர் பிறந்த இல்லத்தில் உறவினர், பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கனடா கொண்டு செல்லப்படுவதற்காகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டது.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எம்.பி., தமது தரப்பு ஆரம்பித்துள்ள இந்த முன்முயற்சியில் பங்குபற்றுமாறு தமிழரசுக் கட்சிக்கு நேரடியாகக் கோரிக்கை விடுத்து அழைப்பு வழங்கி இருந்தார்.

எனினும் இத்தகைய விடயங்கள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு தமது கட்சி ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்திருப்பதாக கூறிய சிவஞானம், அந்தக் குழுவோடு கலந்துரையாடிய பின்னர் தாம் பதிலளிப்பார் எனத் தெரிவித்திருந்தார்.

அத்தகைய முடிவை தமிழரசுக் கட்சி எடுக்கும் வரை அது தொடர்பான கட்சிகளின் சந்திப்பை தள்ளிப் போடுவதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி தீர்மானித்திருப்பதாக இப்போது தெரிகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு வரும் எட்டாம் திகதி மட்டக்களப்பில் கூடுகின்றது. அதற்கு முன்னர் மேற்படி ஏழு உறுப்பினர்கள் கொண்ட குழுவின் கூட்டத்தைக் கூட்டுவதற்கு பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் முடிவு செய்து இருக்கிறார் என அறிய வந்தது.

அந்தக் கூட்டம் எங்கு நடைபெறும், எப்போது நடைபெறும் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. குறைந்த பட்சம் வரும் 8 ஆம் திகதிக்குள் அந்தக் கூட்டம் நடைபெறாவிட்டால், மட்டக்களப்பில் நடைபெறும் மத்திய குழுக் கூட்டத்திற்கு முன்னர் – பெரும்பாலும் முதல் நாள் – மட்டக்களப்பிலாவது அந்தக் கூட்டத்தை நடத்தலாம் என்ற யோசனை தமிழரசுக் கட்சி வட்டாரத்தில் இருப்பதாகத் தெரிகின்றது.

ஆக, அந்தக் கூட்டத்தின் பின்னர் தான் ஒன்று பட்டுக்கு செயற்படுவதற்கு முன்னேற்பாடாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைத்துள்ள கூட்டம் நடைபெறும் என இப்போது தெரிகிறது.

\+ \+ \+

நேற்றுக் கொழும்பில் இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்த குடியரசுத் தினத்தை ஒட்டிய இரவு விருந்தின் போது சிறுபான்மையின எம்.பிக்கள், பிரமுகர்கள் ஒரு வட்டமேசையில் அமர்ந்திருந்து உணவருந்திக் கொண்டிருந்தார்கள். அப்போது பேச்சு ஒரு குறிப்பிட்ட எம்.பி. குறித்துத் திரும்பியது.

நாடாளுமன்றத்தில் கால் நூற்றாண்டுக்கு மேல் சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வரும் ஓர் எம்.பி. ஆச்சரியத்தோடு ஒரு விடயத்தை குறிப்பிட்டார்.

"சில தினங்களுக்கு முன் நாடாளுமன்றத்தின் மலசலகூடம் இருந்த பகுதிக்குச் சென்றேன். அங்கு இந்த எம்.பி. கண்ணாடிக்கு முன் நின்று கைத்தொலைபேசியில் 'டிக் டாக்' பேசிக் கொண்டிருந்தார். மலசல கூடத்திலும் இந்த மனுஷன் அதை விடுவதாக இல்லை ...!" என்று ஆச்சரியம் தெரிவித்தார் அந்த நீண்ட கால எம்.பி...!

இருந்தவர்கள் எல்லோரும் கேலிக் கிண்டல் சிரிப்பில் ஆழ்ந்து போனார்கள்.

தமிழர் பெருமை உலகம் போற்றும் அளவுக்கு உயர்ந்து விட்டது..! வாழ்க நமது அந்தத் தமிழ் எம்.பி...!

---

## மீண்டும் கலைப்பீட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீண்டும் கலைப்பீட பீடாதிபதியாக பேராசிரியர் சி.ரகுராம் நியமிக்கப்படும் வரை கலைப்பீட மாணவர் ஒன்றியம் சாத்வீக ரீதியான போராட்டத்தை முன்னெடுக்கும் என்று கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் மனோகரன் சோமபாலன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவைக் கூட்டம், கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராமின் பதவி விலகல் ஆகியவற்றைத் தொடர்ந்து பல்வேறு தகவல்கள் வெளியாகும் நிலையில் குறித்த விடயம் தொடர்பில் இந்த ஊடகச் சந்திப்பை நடத்துகின்றோம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் சிலர் போதைப்பொருள் மற்றும் மதுபானங்களை நுகர்ந்து பரமேஸ்வரன் ஆலயம் பொங்குதமிழ் தூபி முன்பாக நின்று ஏனைய மாணவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்ட வேளை கலைப்பீட பீடாதிபதி, சட்ட நிறைவேற்று அதிகாரி, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்பவர்களால் அவதானிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி உத்தியோகத்தர்களுடன் குறித்த மாணவர் குழு தகாத வார்த் தைகளைப் பயன்படுத்தி முரண்பட்டார்கள்.

இதையடுத்துமேற்படிமாணவர்கள்மீது முறைப்பாடு முன்வைக்கப்பட்டு ஆரம்ப கட்ட விசாரணை, இரண்டாம் கட்ட விசாரணை, ஒழுக்காற்று சபை குழு, அதனைத் தொடர்ந்து பேரவை என்ற முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால், ஒழுக்காற்றுச் சபையானது அந்த மாணவர்களுக்குக் குறித்த காலப்பகுதிக்கான தண்டனையை வழங்கியிருந்ததாகவும், பேரவை அதனை கேள்விக்குட்படுத்தி பொது மன்னிப்பு வழங்கியதாகவும் அறிவிக்கப்பட்டது.

போதைவஸ்து பாவனை, மதுபான பாவனை என்பன தினமும் இடம்பெற்று வந்த அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது எனச் சொல்லப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தின் பரமேஸ்வரன் ஆலயத்தின் பிரதான நுழைவாயிலுக்கு முன்பு காணப்படுகின்ற சில தடயங்கள் இங்கு போதைப்பொருள் பாவனைகள் பயன்படுத்தப்பட்டு இருக்கலாம் என்ற எண்ணத்தை எங்களுக்கு ஏற்படுத்துகின்றது.

மேற்படி விடயம் தொடர்பாக மேற்படி மாணவர்கள் கல்லாசனம் அகற்றப்பட்டதையும், அதன் விளைவாக அதனை விமர்சித்ததன் காரணத்தாலே பழிவாங்கப்பட்டோம் என்ற விடயத்தையும் சொல்லி இருந்தனர்.

கல்லாசனம் அகற்றப்பட்டது என்ற விடயத்தைக் கேள்விக்குட்படுத்தி பெரிதுபடுத்துகின்றவர்கள் ஏன் அந்தக் கல்லாசனம் அகற்றப்பட்டது என்ற கேள்வியை எழுப்பியிருந்தால் இந்த ஊடகச் சந்திப்பை நடத்தியிருக்க வேண்டிய தேவை வந்திருக்காது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்துடன் கலைப்பீட பீடாதிபதி உரையாடி பத்து கல்லாசனங்கள் பொருத்தமான இடங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. குறித்த விடயம் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பரமேஸ்வரன் ஆலயத்துக்கு முன்பாக இருந்தகல்லாசனம்அகற்றப்பட்டதுதொடர்பில்மாணவர்கள்பலரும்எம்மிடம்மகிழ்ச்சியாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நான் எட்டுப் பேருக்கு மட்டும் கலைப்பீட மாணவப் பிரதிநிதி அல்ல. 3 ஆயிரத்து 500 மாணவர்களுக்கான தலைவராகவே நான் உள்ளேன். சகலரினதும் கருத்தையும் கேட்க வேண்டும். அவர்களின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

பரமேஸ்வரன் ஆலயத்துக்கு முன்பாக உள்ள கல்லாசனத்துக்கு அருகில் பெண்களின் உள்ளாடைகள் சில வேளைகளில் தொங்குவதை நாங்கள் சில தினங்களில் அவதானித்திருக்கின்றோம்.

இவ்வாறான சூழலில் பல்கலைக்கழகப் பேரவை குறித்த முறைப்பாடு தொடர்பாக ஒழுக்காற்றுக் குழுவின் முறைமைகளைக் கடந்து வகுப்புத் தடை விதிக்கப்பட்டமாணவர்கள்உண்ணாவிரதம்இருந்து விட்டார்கள் என்ற காரணத்தின் அடிப்படையில் வகுப்புத் தடையை விடுவித்து இருப்பது எங்களுக்கு மிகவும் கவலையாக இருக்கின்றது.

மாணவர்களின் பிரச்சினை தானே போராட்டத்தில் கலந்துகொள்ளலாம் எனப் பலர் கேட்கலாம். போராட்டம் நடைபெறுகின்ற இடத்தில் இவ்வாறான விடயங்களை மேற்கொண்ட நபர்களும் போராட்டத்தில் பங்கேற்றுள்ள நிலையில் சமூகப் பொறுப்புள்ள பெண்களை மதிக்கின்ற – போதைப்பொருளுக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற நாங்கள், மதுபானத்துக்கு எதிராகச் செயற்படுகின்ற நாங்கள் எந்த அடிப்படையில் அந்த இடத்தில் சமூகமளிக்க முடியும் என்ற கேள்வியை நான் சமூகத்திடம் எழுப்புகின்றேன்.

அதனாலேயே பேரவைக் கூட்டம் நடைபெறும் வரை நாம் மௌனம் காத்துக் கொண்டிருந்தோம். இனியும் மௌனம் காத்துக் கொண்டிருக்க முடியாது. இந்த மாணவ ஒழுக்காற்று விசாரணை நடைமுறைப்படி – ஒழுங்குமுறைப்படி நடத்தப்பட வேண்டும்

கலைப்பீட முதலாம் வருட மாணவர்களின் பாடப் பிரச்சினை தொடர்பாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்கான முழுமையான தெளிவான பதிலை நாங்கள் கூறுகின்றோம்

பல்கலைக்கழக மூதவையால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி பாடத் தெரிவுஅமைகின்றது.2024ஆம்ஆண்டு புதிய கலைப்பீட மாணவர் ஒன்றிய நிர்வாகம் பதவியேற்ற நிலையில் குறித்த மாணவர்களுக்குப் பத்து மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட விரிவுரைகள் நிறைவடைந்திருந்தன. நாங்கள் பதவியேற்பதற்கு ஒன்றரை மாதங்களுக்கு முதலேயே பாடத் தெரிவு தொடர்பான பிரச்சினைகள் இருந்தன. அதற்குப் பொறுப்பாக இருந்த முன்னாள் கலைப்பீட மாணவர் ஒன்றியம் பேசாமல் இருந்தது. தற்போது புதிய கலைப்பீட மாணவர் ஒன்றியம் பதவியேற்று அடுத்த நாள் போராட்டம் செய்ய வேண்டும் என்று முன்னாள் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் கேட்டால் எந்த அடிப்படையில் நாங்கள் போராட்டம் செய்ய முடியும் என்ற கேள்வியை நான் எழுப்புகின்றேன்.

கடந்த முறை இதே சம்பந்தமான பிரச்சினை நடந்து இதே மாதிரி போராட்டம் நடைபெற்றபோது கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர், துறைத் தலைவர்கள், கலைப்பீட மாணவர்களாகிய நாங்கள் இருந்தபோது பல்கலைக்கழக சட்ட ரீதியான முறைமையைக் கேள்விக்குட்படுத்த முடியாது.

06


## காணி விற்பனைக்கு

சுழிபுரம் மூளாய் பகுதியில் சுற்று மதிலுடன் 10 பரப்பு காணியில் அமைந்த 4 அறைகள் 2 குளியல் அறைகளுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :-
+94 772378718

## மீண்டும் கலைப்பீட...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மாணவர்களுக்குப் பிரச்சினை என்றால் இதற்குப் பதிலீடான முறைமையைலக் கொண்டு வாருங்கள். அதனைக் கலைப்பீட நிர்வாகம் செய்யும் என்று பீடாதிபதியால் சொல்லப்பட்டு இருந்தது. ஆனால், 8 மாதங்களாக அமைதியாக இருந்து விட்டு தாங்கள் செய்த பிழைகளை மறைப்பதற்காகச் செயற்படுவது எந்த வகையில் நியாயம்?

மாணவர்களுக்குப் பாட சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். கலைப்பீட மாணவர் ஒன்றிய நிர்வாகக் கூட்ட அறிக்கையில் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு தீர்மானத்தை எடுத்து பீடச் சபையில் அது சம்பந்தமாகக் காட்சிப்படுத்தி பீடச் சபையின் அனுமதியுடன் மாணவர்களுக்கான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். இதற்காக ஏனைய ஐந்து பல்கலைக்கழகங்களின் பாடத் தெரிவுகள் தொடர்பான விடயங்களை ஆய்வு செய்து அதற்கான விடயங்களைச் செய்யத் துறைத் தலைவர்களுடன் கலந்துரையாட நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஆகவே, முறைப்படி பாடப் பிரச்சினை சம்பந்தமாக நாம் நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

பாடப் பிரச்சினை சம்பந்தமாகப் போராடிய நபர்கள் கலைப்பீட மாணவர் ஒன்றியத்துடன் எந்தவித உரையாடலையும் செய்திருக்கவில்லை.

முதலாம் வருட மாணவன் உள்ளிட்ட குறிப்பிட்ட இரண்டு கலைப்பீட மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதில் நேற்று ஒரு உண்மையொன்று வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது.

முதலாம் வருட மாணவன் திட்டமிட்டு குறித்த போராட்டத்தில் சிலரின் தூண்டுதலின் அடிப்படையில் எங்களுக்கு எதிராகச் செயற்பட்டு, கலைப்பீட நிர்வாகத்தைக் குழப்ப வேண்டும் என்ற அடிப்படையில் வழி நடத்தப்பட்டார்.

முறையான வழியில்லாமல் போராட்டத்தைக் கையாண்டதன் அடிப்படையில் முதலாம் வருட மாணவன் வகுப்புத் தடைக்கு உள்ளாக்கப்பட்டார்.

குறித்த விடயத்தை நேற்று நடைபெற்ற விசாரணையில் சட்ட நிறைவேற்று அதிகாரி, மாணவ ஒழுக்க அதிகாரி முன்னிலையில் அந்த மாணவன் ஒத்துக் கொண்டிருக்கின்றார்.

இந்த விடயங்களைத் தேடி ஆராய்ந்து பார்த்தால் போராடியவர்களின் எண்ணத்துக்கும் இதற்குமான தொடர்புகளை அறிந்துகொள்ள முடியும். என்னிடம் ஆதாரங்கள் இருந்தாலும் அந்த ஆதாரங்களை நான் காட்சிப்படுத்த முடியாது. ஊடகங்கள் அந்த விடயங்களை வெளியில் எடுக்க வேண்டும்.

குறித்த இரண்டு விடயங்கள் அடிப்படையில் பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

குறித்த போதைப்பொருள் சம்பந்தப்பட்ட விடயத்தை பேரவையில் விசாரிக்காமல், மூன்று விசாரணைகளில் உண்மை என்று நிரூபிக்கப்பட்ட நிலையில் அந்த விடயம் உண்மை என்றால் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் பதவி விலகியதற்குப் பேரவை எடுத்த முடிவுதான் காரணம் என்றால் இது வெறுமனே பேராசிரியர் ரகுராமுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த கலைப்பீட சமூகத்துக்கும் மேலே கொடுக்கப்பட்ட கறை. அவமானமாகவே நான் பார்க்கின்றேன்.

பல்கலைக்கழகத்துக்கு ஒவ்வொரு மாணவனையும் அனுப்புகின்ற அம்மா, அப்பா, சகோதரர்கள் மிகவும் அவமானப்படக்கூடிய விடயமாகவே இதனை நான் பார்க்கின்றேன்.

போதைப்பொருள் விடயத்துக்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் எந்த நம்பிக்கையில் இங்கு பெற்றோர் தமது பிள்ளைகளை அனுப்புவார்கள்.

தற்போது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்த பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தண்டனை விலக்களிக்க முடியும் என்றால் இதுவரை பல்கலைக்கழகத்தால் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்களுக்கு என்ன பதிலைப் பேரவையும் பல்கலைக்கழகமும் சொல்லப் போகின்றது.

எந்தத் தவறிழைத்தாலும் உண்ணாவிரதம் செய்தால் வகுப்புத் தடையை விடுத்து உள்ளே வரலாம் என்ற முன்னுதாரணத்தை இந்தப் பேரவை மேற்கொண்டிருந்தால் என்ன செய்யும் முடியும் என்ற கேள்வியை நான் எழுப்புகின்றேன்.

பண்பாட்டு அடையாளம், தமிழ்த் தேசியத்தின் இருதயநாதம் என்று அழைக்கப்படும் யாழ். பல்கலைக்கழகத்தில் இவ்வாறான போதைப்பொருள் தொடர்பான செயல்களை அனுமதிக்கின்ற இந்த நிர்வாகம் சமூகத்துக்கு என்ன சொல்ல வருகின்றது?

கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் எந்த அடிப்படையில் அந்தப் பதவியில் இருந்து விலகினாரோ அந்த விடயத்துக்காக உயர்ந்த கௌரவத்தோடும், என்ன விடயத்துக்காகப் பாடுபட்டாரோ அந்த விடயத்துக்கான வெற்றியோடும் மீளவும் கலைப்பீட பீடாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும். நியமிக்கப்பட்டால் மாத்திரமே இந்த விடயத்தை முன் கொண்டு செல்ல முடியும். மீளவும் கலைப்பீட பீடாதிபதியாக பேராசிரியர் ரகுராம் நியமிக்கப்படும் வரை சாத்வீக ரீதியான போராட்டத்தைக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் முன்னெடுக்கும். போராட்டம் தொடர்பான அறிவிப்பு உத்தியோகபூர்வமாக விரைவில் அறிவிக்கப்படும்." - என்றார்.

---

## யாழ்.வருகின்றார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். மாவட்ட செயலகத்தில் விசேட மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அவர் பங்கேற்கவுள்ளார்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அங்கத்தவர்களுடனான சந்திப்புகளிலும் அவர் பங்கேற்கவுள்ளார் எனத் தகவல்கள் கூறுகின்றன.

இதனை விடவும், தென்மராட்சியில் ஆலய நிகழ்வொன்றில் ஜனாதிபதி பங்கேற்பதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. எனினும், இதற்கான உறுதிப்படுத்தல்கள் இன்னமும் செய்யப்படவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாகக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார். இந்நிலையில், தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்ததன் பின்னர் ஜனாதிபதி அநுரகுமாரவின் முதல் யாழ். விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

---

## கலைப்பீட பீடாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரகுராமின் இந்தப் பதவி விலகல் பல்கலைக்கழகத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் மீண்டும் அவர் பீடாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் பல தரப்பினராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் பல்கலைக்கழகத்துக்குள் தவறான சில செயற்பாடுகளை முன்னெடுத்திருந்த நிலையில் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வகுப்புத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து பல்கலைக்கழகத்துக்குள் தவறான செயற்பாடுகளை முன்னெடுத்த அந்த மாணவர்கள் இணைந்து தமது வகுப்புக் தடையை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி போராட்டமொன்றை ஆரம்பித்திருந்தனர்.

ஆனால், தவறிழைத்த மாணவர்களுக்கு எதிராகப் பல்கலைக்கழகத்துக்குள்ளேயே பல்வேறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அதன் பின்னரே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் வகையிலே வகுப்புக் தடை விதிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில், பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தின்போது தவறிழைத்த மாணவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. பேரவையின் இத்தகைய நடவடிக்கை பலருக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

குறிப்பாக ஒரு சில மாணவர்களின் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனைகளாலும், ஒரு சிலரின் அநாகரிக வார்த்தைப் பிரயோகங்களாலும் பல்கலைக்கழகத்தின் ஏனைய மாணவர்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினைகளைத் தட்டிக் கேட்கவோ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையோ எடுக்க முடியாத நிலைமையை பல்கலைக்கழகப் பேரவையின் செயற்பாடுகள் ஏற்படுத்தியுள்ளன.

இதனால் மாணவர்களின் தவறைத் தட்டிக் கேட்க மாணவ, மாணவிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் பல்கலைக்கழகத்துக்குள் உரிய முடிவுகளை எடுக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது. பல்கலைக்கழகத்துக்குள் தவறிழைப்பவர்களுக்கு நடவடிக்கை எடுக்கப் பல்கலைக்கழக பேரவை ஒத்துழைப்பு வழங்காத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் இத்தகைய செயற்பாடுகளில் அதிருப்தியுற்ற காரணத்தினாலேயே கலைப்பீட பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் சி.ரகுராம் தாம் பதவி விலகுவதாகக் கடிதம் மூலம் துணைவேந்தருக்கு அறிவித்துள்ளார்.

ஆனால், பல்கலைக்கழக நிர்வாகக் கட்டமைப்பின் அடிப்படையிலே மாணவர்களின் நலனையும் பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற பேராசிரியர் சி.ரகுராம் பதவி விலகக் கூடாது எனவும், மீண்டும் அவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டு பீடாதிபதியாக அவர் இருக்க வேண்டும் எனவும் மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பென்சில், வர்ண பூச்சுகளின் தரத்தில் கவனம் தேவை

பாடசாலை மாணவர்களுக்காக பென்சில் மற்றும் வர்ண பூச்சுகளைக் கொள்வனவு செய்யும் போது அவற்றின் தரம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என சுகாதாரத் துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

பென்சில் மற்றும் வர்ண பூச்சுகளைத் தயாரிப்பதற்காக வெவ்வேறு இரசாயனங்களும் உலோகங்களும் பயன்படுத்தப்படுகின்றன என கொழும்பு சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வைத்தியர் மஹிந்த விக்ரமாராச்சி தெரிவித்துள்ளார்.

அவற்றைக் கொள்வனவு செய்யும் போது இந்த விடயம் தொடர்பில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த இலங்கை அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் பிரியந்த பெர்னாண்டோ, தரமற்ற வர்ண பூச்சுகள் தொடர்பில் பெற்றோர்கள் கவனத்துடன் செயற்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் வர்ண பூச்சுகளைத் தயாரிப்பதற்கென தர அளவுகள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிய தர பரிசோதனையின்றி இறக்குமதி செய்யப்பட்ட



பல வகையான வர்ண பூச்சுகள் தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன என இலங்கை அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# 4,044 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்



இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 4,044 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அந்த மாவட்டத்தில் 614 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கடந்த 3 வாரங்களில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கைக்கு அமைய, 19 சுகாதார அதிகாரி பிரிவுகள் அதிகளவில் டெங்கு பரவல் அபாயமிக்க பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் டெங்கு நோயினால் இருவர் உயிரிழந்துள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# நல்லூர் இளங்கலைஞர் மன்ற புதிய கட்டட திறப்பு விழா மூன்றாம் நாள் நிகழ்வு இன்று

நல்லூர் இளங்கலைஞர் மன்றம், புலம்பெயர் உறவுகள் மற்றும் கலைஞர்களின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட புதிய புதிய கட்டடத் திறப்பு விழாவை அடுத்து இடம்பெற்று வரும் நிகழ்வுகளில் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று (27) மாலை இடம்பெறவுள்ளன.

இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி இட்பெறவுள்ள இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு. நந்தகோபாலன், யாழ். பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியரும் முன்னாள் துணைவேந்தருமான பொன். பாலசுந்தரம்பிள்ளை, முன்னாள் இசைத் துறைத் தலைவர் இசைப் பேறறிஞர் நா.வி.மு. நவரத்தினம், ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் சிதம்பரம் இசைமைந்தன் நயினை ப.சிவமைந்தனின் இசையரங்கு இடம்பெறும். அணிசெய் கலைஞர்களாக வயலின் – இ. நிரோஜன், மிருதங்கம் – வ. ரமணசர்மா, கெஞ்சிரா– ர.லயசர்மா, கடம் – உ.ஹிதுஷன், முகர்சிங் – ர.கானாம்ருதசர்மா ஆகியோர் இணைந்து கொள்வர்.

தொடர்ந்து நாதஸ்வரக் கலாநிதிகளான பி.எஸ். பாலமுருகன், பி. குமரன், தவில் – பி.எஸ். செந்தில்நாதன், பி.வேந்துஷன் ஆகியோரின நாதஸ்வர தவில் இசையரங்கு இடம்பெறும்.

இதனை அடுத்து இந்தியா மைசூர் சகோதரர்களின் வயலின் இசையரங்கு இடம்பெறும். அணிசெய் கலைஞர்களாக வயலின் – கலாநிதி மஞ்சுநாத், கலாநிதி நாகராஜ், மிருதங்கம் – நெய்வேலி பி. வெங்கடேஷ், அ. அத்றியா ஆகியோர் இணநது கொள்வர்.

இறுதியில் கொக்குவில் கலாபவன மாணவர்களின் நிருத்திய சமர்ப்பணம் இடம்பெறும். நட்டுவாங்கம் – சாந்தினி சிவனேசன், பாட்டு ஜெ. மதுஷிகன், மிருதங்கம் – க.கஜன், வயலின் – இ.நிரோஜன்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சட்டத்தை இறுக்குக!

“தேர்தல் பிரசார நிதிச் சட்டங்களைத் திருத்தியமைக்க வேண்டும். உரிய காகத்தில் தேர்தல் பிரசார செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறிய வேட்பாளர்களை, தனியான சட்ட நடவடிக்கையின்றி, நேரடியாகவே தகுதி நீக்கம் செய்ய வழி செய்யும் விதத்தில் சட்டங்களைத் திருத்த வேண்டும்.” - இவ்வாறு சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை (‘பவ்ரல்’) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோஹணஹெட்டியாராச்சி முன்மொழிந்திருக்கின்றார்.

அவரது இந்தக் கோரிக்கையில் நியாயம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

இந்த ஒழுங்குளை மீறும் வேட்பாளர்களுக்கு எதிராக தற்போதைய ஏற்பாடுகளின்படி தேர்தல்கள் ஆணைக்குழு, பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாகவே சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இது சிக்கலானது மற்றும் பொருத்தமற்றது எனச் சுட்டுகின்றார் ஹெட்டியாராச்சி.

“இது பிரசார நிதிச் சட்டங்கள் தொடர்பான ஒரு முக்கிய பிரச்சினை. 2024 ஜனாதிபதித் தேர்தலின் போது 13 வேட்பாளர்கள் தங்கள் செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறிவிட்டனர். அதே போன்று, எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நூறுக்கும் மேற்பட்ட வேட்பாளர்களும், நவம்பர் 2024 பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 1,200க்கும் மேற்பட்ட வேட்பாளர்களும் தங்கள் அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை”என்று யதார்த்த நிலையைத் தெளிவுபடுத்துகின்றார் அவர்.

தற்போதைய சட்டங்களின் கீழ், அத்தகைய நபர்களுக்கு தண்டனை வழங்குவதற்கான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்துத் தொடர்வதில் உள்ள சிக்கல்களை ஹெட்டியாராச்சி விளக்குகின்றார்.

“உரிய நேரத்தில் தங்கள் செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறியவர்களுக்கு எதிராக தேர்தல் ஆணைக்குழு பொலிஸில் முறைப்பாடுகளை பதிவு செய்கிறது. மேலும் பொலிஸ் துறை, சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் பின்னர், சட்ட நடவடிக்கை எடுக்கிறது. இது ஒரு நீண்ட மற்றும் தேவையற்ற செயல்முறையாகும். ஏனெனில் இதற்கு விசாரணை தேவையில்லை. இது இணங்கத் தவறிய நேரடியான வழக்கு”- என்று அவர் கூறுவதில் அர்த்தம் உண்டு.

எதிர்வரும்உள்ளூராட்சிசபைத்தேர்தலில் இவ்விடயம் தொடர்பில் ஏற்படக்கூடிய நிர்வாகச் சவால்கள் குறித்து அவர் எச்சரிக்கின்றார்.

“உதாரணமாக, உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் 10,000 வேட்பாளர்கள் தங்கள் செலவு அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறினால், தேர்தல் ஆணையம், பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவை திணறிவிடும். வரிசையாக வழக்குகளைப் பதிவு செய்வதைத் தவிர வேறு எதிலும் கவனம் செலுத்தும் திறன் அவர்களுக்கு இல்லாமல் போய்விடும். இதேபோல், நீதிமன்றங்களுக்கு இந்த வழக்குகளை விசாரிப்பது பெரும் சுமையாகி விடும். நீதித் துறையின் மற்றைய பணிகளுக்கு ஊறு ஏற்படும்” - என்கிறார் அவர்.

தேர்தல் பிரசார நிதிச் சட்டங்களின் கீழ் தற்போதைய அபராதங்களை குறை கூறுகின்றார் அவர். தற்போதைய சட்டங்களின்படி செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறியமைக்காக குற்றவாளியாகக் காணப்படும் ஒருவர், மூன்று ஆண்டுகளுக்குத் தன் குடியுரிமைகளை இழப்பார். ஒரு லட்சம் ரூபா வரை அபராதம் செலுத்த வேண்டியிருக்கும்.

குடியுரிமைகளை இடைநிறுத்தும் காலத்தை மூன்றிலிருந்து ஏழு ஆண்டுகளாக நீடிக்க முன்மொழியும் அவர், சரியான நேரத்தில் தங்கள் செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறிய தனிநபர்கள் தங்கள் குடிமையுரிமைகளை உடனடியாக இழக்கக் கூடியதான கடுமையான சீர்திருத்தங்களுக்கு அழைப்பு விடுக்கின்றார்.

இந்த நடவடிக்கைகள் தேர்தல் விதிகளின் அமுலாக்கத்தை எளிதாக்குகின்றமை மட்டுமல்லாமல், வேட்பாளர்களிடமிருந்து அதிக பொறுப்புணர்வை உறுதி செய்யும் என்றும் அவர் கூறுவதில் அர்த்தம் இல்லாமலில்லை.



# ‘யார் இந்த ரோஹிங்கியாக்கள்?’ இன்று கொழும்பில் கலந்தாய்வு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கைக்கு சமீபத்தில் வந்த மியான்மரைச் சேர்ந்த நாடற்ற அகதிகளான ரோஹிங்கியாக்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழ்கிற நாடற்ற ரோஹிங்கியாக்கள் சம்பந்தமான வீடியோ சாட்சியங்களைக் கொண்ட ஒரு கலந்துரையாடல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00-5.00 மணி வரை கொழும்பு 10, இல 281, டீன்ஸ் வீதியில் அமைந்துள்ள சமூகம் சமய நடுநிலையத்தில் இடம்பெறவுள்ளது.




ரோஹிங்கியாக்கள் : அவர்கள் யார்? அவர்கள் ஏன் இலங்கையில் இருக்கிறார்கள் ? நாம் என்ன செய்ய வேண்டும்? போன்ற கேள்விகளுக்கு விடை காணும் வகையில் இக் கலந்துரையாடலானது சமூகம் சமய நடுநிலையம் மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சில் ஆகிய அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுக்கு அரசாங்கப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் எவரும் கலந்து கொள்ளலாம் எனவும் உங்களின் வருகையை கீழ்வரும் (எஸ்.எம்.எஸ். அல்லது வட்ஸ்அப் செய்தி) அல்லது மின்னஞ்சல் மூலம் உறுதிப்படுத்தும் படியும் கேட்கப்பட்டுள்ளது. +94772580763/ +94777359678, nilushidewapura@gmail.com



# கடந்த ஆண்டு வளர்ச்சி கண்டுள்ள இலங்கை விமானப் போக்குவரத்து

2024 ஆம் ஆண்டு இலங்கையின் விமான போக்குவரத்து வளர்ச்சியடைந்துள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கடந்த வருடம் நாட்டில் உள்ள சர்வதேச விமான நிலையங்களான, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் ஊடாக 8,711,992 விமான பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

விமான நிலையங்களின் ஊடாக நாட்டுக்கு வந்தவர்களின் எண்ணிக்கை 2023ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடம் 17.69 சதவீதமாக வளர்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், கடந்த வருடம் 56,289 விமானங்கள் நாட்டுக்கு பிரவேசித்துள்ளதுடன், அது 20.69 சதவீத வளர்ச்சியாகும்.

2024ஆம் ஆண்டில் விமானம் ஊடான சரக்கு போக்குவரத்து 21.13 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன், 192,498 மெற்றிக் தொன் சரக்குகள் விமான நிலையங்களில் கையாளப்பட்டுள்ளன.

அத்துடன், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு எமிரேட்ஸ், கட்டார் எயார்வேஸ், சிங்கப்பூர் எயார்லைன்ஸ், எதியாட் எயார் லைன்ஸ், எயார் இந்தியா, இன்டிகோ, துர்கிஸ் எயார்லைன்ஸ் உள்ளிட்ட 30 விமான நிறுவனங்களின் விமானங்கள் இலங்கைக்கான சேவைகளை முன்னெடுத்துள்ளன என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# இணைக்கசபைக் கூட்டத்தின்போது ஏற்பட்ட மோதலில் ஒருவர் பலி



மாத்தறை - திஹகொட பேதன் கஹவத்த விகாரையில் இடம்பெற்ற இணைக்கசபை கூட்டத்தின்போது ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முறைப்பாடொன்று தொடர்பான விசாரணைக்காக வந்திருந்த இரு தரப்பினரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியமையினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது காயமடைந்த 73 வயதான ஒருவர் கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# 32 மில்லியன் ரூபா பெறுமதியான சட்டவிரோத சிகரெட்டுகள் கைப்பற்றல்

32 மில்லியன் ரூபா பெறுமதியான சட்டவிரோத சிகரெட்டுகள் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு துறைமுகத்திலுள்ள களஞ்சியசாலையொன்றில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போதே இந்த சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பிளாஸ்டிக் கொள்கலன்களில் அடைத்து இந்த சட்டவிரோத சிகரெட்டுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து குறித்த சட்டவிரோத சிகரெட்டுகள் கொண்டுவரப்பட்டுள்ளன என சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

420,000 சிகரெட்டுகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# தண்ணீர் குழியில் மூழ்கி 13 வயதுச் சிறுவன் பலி!

வாரியபொல ஹிந்தகொல்ல பகுதியில் பாதுகாப்பற்ற தண்ணீர் நிறைந்த குழியொன்றில் மூழ்கி 13 வயதான சிறுவனொருவர் உயிரிழந்துள்ளார்.

அந்த சிறுவன் மற்றுமொரு சிறுவனுடன் நீராடச் சென்றபோது இருவரும் நீரில் மூழ்கியுள்ளனர்.

பிரதேச மக்கள் அவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தபோதிலும் ஒரு சிறுவன் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

16 வயதான மற்றைய சிறுவன் சிகிச்சை பெற்று வருகின்றார்.









# ஸ்கந்தவரோதயவில் பொங்கல் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 93 இல் சாதாரணதரம், 96 இல் உயர்தரம் படித்த பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் தைப் பொங்கல் விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி அணியின் பழைய மாணவர் செயற்குழுவின் உப தலைவர் மா.ராமகிருஷ்ணன் தலைமையில் கல்லூரியின் ஒறேற்றர் மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்நிகழ்வு நடைபெற்றது.

ஆலய வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர், விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு கல்லூரி மண்டபத்தில் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பிரதம விருந்தினராக கல்லூரியின் பதில் முதல்வர் க. முரளிமோகன், சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் முன்னைநாள் அதிபர், ஆசிரியர்களும், கௌரவ விருந்தினர்களாக தேசிய ரீதியில் சாதனை படைத்த மாணவர்களும் கலந்து கொண்டனர்.

கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பழைய மாணவர்களின் சிறப்புரைகளும் இடம்பெற்று தேசிய ரீதியில் சோதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.
















# இந்திய இராணுவ வலிமையை பறைசாற்றிய அணிவகுப்புகள்

டில்லியில் உள்ள கடமைப் பாதையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடந்த 76 ஆவது குடியரசு தின விழாவில் இந்தியாவின் கலாச்சாரப் பாரம்பரியமும், இராணுவ வலிமையும் கட்சிப்படுத்தப்பட்டன.

கடமைப் பாதையில் நடந்த விழாவில், மாநிலங்கள் மற்றும் அமைச்சகங்களின் 31 அலங்கார ஊர்திகள், பாதுகாப்புப் படைகளின் பிரம்மிக்க வைக்கும் ஒருங்கிணைந்த அணிவகுப்புகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன.

தேசிய தலைநகர் டில்லியில் காலை 10.30 மணி அளவில் குடியரசு தின விழா தொடங்கியது. இதற்காக கடமைப் பாதைக்கு வந்த குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, சிறப்பு விருந்தினரான இந்தோனேஷிய ஜனாதிபதி பிரபோவோ சுபியாண்டோ ஆகியோரை, பிரதமர் நரேந்திர மோடி, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, அமித் ஷா உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், முப்படை தளபதிகள், இராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

21 குண்டுகள் முழங்க தேசியக் கொடியை குடியரசு தலைவர் திரவுபதி முர்மு ஏற்றினார். இதையடுத்து, தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அனைவரும் எழுந்து நின்று தேசியக் கொடிக்கும் தேசிய கீதத்துக்கும் மரியாதை செலுத்தினர். அப்போது, 4 இராணுவ ஹெலிக்கொப்டர்கள் மூலம் மலர்கள் தூவப்பட்டன.

இராணுவ அணிவகுப்பு நடத்தப்பட்டது. இராணுவம், கடற்படை, விமானப்படை உள்பட பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த பல்வேறு பிரிவுகள் குழுக்களாக அணிவகுத்து வந்து குடியரசுத் தலைவருக்கு மரியாதை செலுத்தினர்.

இந்தியாவின் இராணுவ வலிமையை பறைசாற்றும் இராணுவ வாகன அணிவகுப்பு நடத்தப்பட்டது. பல்வேறு நவீன ரக வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்தின.

# ஆளுநரின் தேநீர் விருந்தில் தமிழக கட்சிகள் பங்கேற்பு



இந்திய குடியரசு தினத்தையொட்டி தமிழக ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற தேநீர் விருந்தில் அ.தி.மு.க, பா.ஜ.க. மற்றும் கூட்டணி கட்சியினர் பங்கேற்றனர்.

ஆளுநர் மாளிகையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேநீர் விருந்துக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமை தாங்கினார்.

இதில் ஆளுநரின் மனைவி லட்சுமி ரவி, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம், முன்னாள் ஆளுநர் தமிழிசை, அ.தி.மு.க. சார்பில் டி.ஜெயக்குமார், பாலகங்கா, தமிழக பா.ஜ.க. சார்பில் அண்ணாமலை, ஹெச்.ராஜா, ஆர்.சரத்குமார், தே.மு.தி.க. சார்பில் எல்.கே.சுதீஷ், பார்த்தசாரதி, தமாகா தலைவர் ஜி.கே.வாசன், புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி, ஐ.ஜே.கே. நிறுவனர் பாரிவேந்தர், வேல்ஸ் பல்கலை. வேந்தர் ஐசரி கணேஷ் மற்றும் தொழிலதிபர்கள், முக்கிய பிரதிநிதிகள் பங்கேற்றனர்.



# சூடானின் வைத்தியசாலை ஒன்றில் பயங்கரவாத தாக்குதல்; 70 பேர் பலி

சூடானில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட பயங்கர வாத தாக்குதலில் 70 பேர் உயிரிழந் துள்ளனர்.

சூடானின் வடக்கு டார்பர் பகுதியில் உள்ள வைத்தியசாலை மீது ஆளில்லா விமானங்கள் மூலம் இந்தத் தாக்கு தல் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை சவூதி அரேபியா வின் வெளிவிவகார அமைச்சு இந்தத் தாக்குதலை சர்வதேச சட்ட மீறல் என தெரிவித்துள்ளது.

சூடானில் சுகாதாரப் பாதுகாப்பு மீதான அனைத்து தாக்குதல்களை யும் நிறுத்துவதற்கு தாம் தொடர்ந்து அழைப்பு விடுப்பதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

# டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் விடுத்த கோரிக்கையை நிராகரித்த மெக்சிகோ!

அகதிகளை நாடு கடத்தும் இராணுவ விமானத்தை தரையிறங்க அனுமதிக்கு மாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் விடுத்த கோரிக் கையை மெக்சிகோ நிராகரித்துள்ளது.

அமெரிக்க அதிகாரி ஒருவரையும், மெக்சிகோவின் அதிகாரி ஒருவரையும் மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் இந்த செய்தியை வெளியிட்டுள்ளன.

அமெரிக்க இராணுவ விமானம் கடந்த வெள்ளிக்கிழமை குவாத்தமாலாவுக்கு சுமார் 80 அகதிகளுடன் இரண்டு விமா னங்களை அனுப்பியது.



எவ்வாறாயினும், அமெரிக்காவு டன் மிகச் சிறந்த உறவை கொண்டி ருப்பதாகவும், குடியேற்றம் போன்ற பிரச் சினைகளில் ஒத்துழைப்பு வழங்குவ தாகவும் மெக்சிகோவின் வெளியுறவு அமைச்சு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகுதியில் ஒரு அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

தங்கள் பிரதேசத்திற்கு மெக்சிகன் கள் வருவதை நாங்கள் எப்போதும் திறந்த கரங்களுடன் ஏற்றுக்கொள் வோம் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தரையிறங்க அனுமதி மறுக்கப்பட்ட தற்கான காரணத்தை மெக்சிகன் அதி காரி தெரிவிக்கவில்லை, அதே நேரத் தில் வெளியுறவு அமைச்சும் இந்த சம்பவத்தைக் குறிப்பிடவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# புதிதாக 15,000இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை இணைத்தது ஹமாஸ்



இஸ்ரேலுடனான யுத்தம் ஆரம்பித்த பின்னர் பலஸ்தீனிய போராளி அமைப் பான ஹமாஸ் புதிதாக 15000 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை இணைத் துக்கொண்டுள்ளது என அமெரிக்க புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

இதன் மூலம் ஈரான் ஆதரவு அமைப்பு இஸ்ரேலிற்கு தொடர்ந்தும் அச்சுறுத்தலாக விளங்கலாம் என அமெரிக்க புலனாய்வு பிரிவுகள் குறிப் பிட்டுள்ளது.

இதேவேளை, 15000 ஹமாஸ் உறுப் பினர்கள் இஸ்ரேலுடனான மோதலின் போது கொல்லப்பட்டுள்ளனர் என அமெரிக்க புலனாய்வு தெரிவித்துள்ளது.

ஜோபைடன் நிர்வாகத்தின் இறுதி நாள்களில் கிடைத்த தகவல்கள் உட்பட பல தகவல்கள் குறித்து அமெரிக்க புலனாய்வு வட்டாரங்கள் காங்கிர ஸிற்கு பல தகவல்களை வழங்கியுள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் புதிய உறுப்பினர்களை இணைத்துக்கொள்வதில் வெற்றி பெற்றுள்ளது. புதிதாக இணைக்கப்பட்ட வர்களில் பலர் இளையவர்கள் எனவும் புதியவர்களிற்கு இன்னமும் பயிற்சிகள் வழங்கப்படவில்லை என்றும் அமெரிக்க புலனாய்வு தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கையை பூர்த்தி செய்த பின்னர் படைகளை மீளபெறும் ஒவ் வொரு சந்தர்ப்பத்திலும்,ஹமாஸ் மீள் எழுச்சி பெறுகின்றது. பூர்த்தி செய்வ தற்கு வேறு எந்த வெற்றிடமும் இல்லா ததே இதற்கு காரணம் என அன்டனி பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.01.2025




இன்றைய செயல்கள் சமூகமாக நடக்கும். நீங்கள் உற்சாகமான மன நிலையில் காணப்படுவீர்கள். வீட்டுக்கு விருந்தினர்கள் வருகை காணப்படும். அவர்களுடன் சேர்ந்து மகிழும் வாய்ப்பு கிடைக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் இன்று பணியில் வளர்ச்சி காண்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். இன்று நல்ல மன நிலையில் காணப்படு வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படுகின்றது. பாதுகாப்பான பொருளாதார நிலை காணப்படும். உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாகக் காணப்படுவீர்கள்.




இன்று உங்களுக்கு பொறுமை அவசி யம். பிறருடன் பேசும் போது கவன மாகப் பேச வேண்டும். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று உங்கள் பணியில் திருப்தி குறைந்து காணப்படும். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

நீங்கள் உணர்ச்சிவசப்பட்டுவீர்கள். இதனால் உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்க ளின் ஆழமான உறவை தக்க வைத்துக்கொள்ள உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை சாதகமாக காணப்படாது. உங்க ளால் முடிந்த அளவுக்குப் பிறருக்குப் பண உதவி செய் வதன் மூலம் இன்றைய நாளை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

பல் வலியால் இன்று நீங்கள் அவதிபடலாம். பற்க ளுக்கு சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்று சிறப்பான நாளாக அமையாது. சவால்களை எதிர்கொள்ள வேண்டியி ருப்பதால் உங்கள் உணர்சிகளில் கட்டுப் பாடு இன்றி இருப்பீர்கள். பொறுமை அவசியம். உங்கள் மனதில் இருக்கும் குழப்பங்களை விலக்க வேண்டும்.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளை திறமையாக கையாள்வது கடினமாக இருக்கும்.

உங்களின் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும்.

இன்று குறைந்த அளவு பணமே சம்பாதிக்க முடியும் . பணத்தை சேமிப்பதும் கடினமாகத் தெரியும். அதிர்ஷ்டம் உங்களுக்குச் சாதகமாக இருக்காது.

இன்று வயிற்று வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் கொள்கைகளில் வெற்றி பெறுவதற்கு சாதகமான நாள். உங்களிடம் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணரும் நாள். முக்கியமான முடிவுகளை எடுக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் செயல்திறன் மூலம் உங்கள் திறமை வெளிப் படும் நாள். நீங்கள் தொடர்ந்து முயன்று உங்கள் திறமைகளை நிரூபிக்கக் கடுமையாகப் போராட வேண்டும்.

இன்று உணர்ச்சி வசப்பட்டுக் காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தைப் பாதிக்கும்.

இன்று பண வரவு சிறப்பாக காணப்படும். பணத்தை சிறப்பாக பயன்படுத்துவீர்கள். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதற்குப் பணத்தைப் பயன்படுத்துவீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாகக் காணப்படும்.




இன்றைய நாள் சாதகமாக இருக் காது.உங்கள்அன்றாடநடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது கூடுதல் கவனம் தேவை. பிறருடன் பேசும் போது யோசித் துக் கவனமாகப் பேச வேண்டும். பிரார்த் தனை மூலம் ஆறுதல் கிடைக்கும்.

சகபணியாளர்களை சமாளிப்பதைக் கடினமாக உணர்வீர்கள். நீங்கள் பொறுமையாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். எதிர்மறை உணர்ச்சிகளை உங்கள் துணையிடம் காட்டாமல் இருப்பது சிறந்தது.

பண வரவு போதிய அளவிற்கு இருக்காது. உங்கள் பிரியமான ஒருவரின் உடல் நலத்திற்காக திடீர் செலவு ஏற்பட வாய்ப்புள்ளது.

கண் எரிச்சல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று பொறுமையாக இருக்க வேண் டும். யதார்த்தமாக இருக்க வேண்டும். உங்கள் உடன்பிறந்தவர்களால் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரும். இதனால் உங்களுக்கு வருத்தம் உண்டா கும். அவர்களை தவிர்த்தல் நல்லது.

பணியிடச்சூழல் சாதகமாக இருக்காது. கடினமாகஉழைத்தாலும்உங்கள்பணிக்குஅங்கீகாரமும்நற் பெயரும் கிடைக்காது.

உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியாக இருக்க வேண்டும், சில சமயங்களில் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும் உங்கள் பொறுப்பு கள் அதிகரிக்கும் காரணத்தால் நீங்கள் அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கழுத்தில் விறைப்புத் தன்மை ஏற்படலாம்.




இன்றைய நாள் உங்கள் இலக்கு களை அடைவதற்கு உங்களுக்கு சாதகமாக இருக்காது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.எதிர்மறை எண்ணங்களை விலக்க நீங்கள் சம யோஜித புத்தியை பயன்படுத்த வேண்டும்.

அதிக வேலை காரணமாக நீங்கள் சோர்ந்து போவீர் கள். உங்கள் பணிகளை திறமையாக திட்டமிட்டு ஒழுங்க மைக்க வேண்டும். நல்ல வளர்ச்சிக்கு இது வழிகாட்டும்.

நீங்கள் உங்கள் துணையிடத்தில் உணர்சிவசப்படு வீர்கள். உறவின் நல்லிணக்கத்தை இது பாதிக்கும் என்பதால் இதனை தவிர்த்தல் வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பணத்தை சிக்கனமாகக் கையாள வேண்டும். சேமிக்கும் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண கடுமையாக உழைக்க வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள். பிரார்த்தனை மேற்கொள் வதன் மூலம் நற்பெயரைப் பெறுவீர்கள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிக்காட்டு வீர்கள். உங்கள் பணிக்கான நன்மதிப்பும் நற்பெயரும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பழகு வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது.

உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக நீங்கள் துடிப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.01.2025




இன்று சிறப்பான நாள். சிறிய முயற்சியில் உங்கள் இலக்குகளை அடைவீர்கள். புதிய முதலீடு லாபகரமாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும்.

பணியிடத்தில் சுமூகமான நிலை காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாகச் செய்வீர்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரைவாக செய்து முடிப்பீர்கள்.

நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வதன் காரணமாக இன்று நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சிகரமாக இருப்பீர்கள்.

பணவரவு சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்தின் வளர்ச்சிக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் நிறைந்த மன நிலை காரணமாக இன்று நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும். உங்கள் நலத்தை மேம்படுத்த இது உகந்ததல்ல.

பணியிடத்தில் சிறப்பான பலன்கள் காணப்படாது. அதிகப் பணிகள் காரணமாக உங்கள் பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நட்பு முறையுடன் அணுகுவதன் மூலம் உறவில் சுமூகமான பலன்கள் கிடைக்கும்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும். உங்கள் உடனடித் தேவைகளை பூர்த்தி செய்ய போதிய அளவு பணம் காணப்படாது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படாது. இன்று உங்களை உற்சாகமாக வைத்துக் கொண்டு மற்றவரையும் மகிழ்விக்க வேண்டும். எது வந்தபோதிலும் சமநிலையோடு ஏற்றுக் கொள்ளுங்கள். இன்றைய நாள் உங்களுக்குச் சாதகமாக அமையப் பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

பணிச்சுமை காரணமாக பணியில் சில அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளால் சில பிரச்சினைகளை எதிர் கொள்வீர்கள். பணிகள் இறுக்கமாக காணப்படும். நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பணபுழக்கம் குறைவாக காணப்படும். நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று நன்மையான பலன்கள் நடக்கும். உங்கள் கடின உழைப்புக்கான பலன்களைப் பெறுவீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் நல்ல பலனை பெற்றுத் தரும்.

பணிகள் திருப்தியை அளிக்கும். உங்களிடம் காணப்படும் புத்திசாலித்தனம் மற்றும் செயல்திறன் காரணமாக வெற்றிகரமான பலன்கள் கண்டு பிறரின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறலாம். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வைப் பராமரிப்பீர்கள்.

இன்று சாதகமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் பணத் தேவைகளை எந்தவிதமான இடையூறுமின்றி நிறைவேற்றுவீர்கள். இன்று அதிர்ஷ்டமான நாள்.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# யாழ். பல்கலைக் கழகத்தின் 50ஆவது ஆண்டுவிழா!

## ஏப்ரல் மாதம் மூன்று தினங்கள் நிகழ்வுகள்

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு பூர்த்தியைத் தொடர்ந்து பொன்விழா நிகழ்வுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26, 27, 28 ஆகிய தினங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது என்று பல்கலைக் கழகத்தின் கலைப்பீட பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் இமானுவேல் ஆனோல்ட் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைபீடத்தில் கல்வி கற்ற யாழ்ப்பாண பல்கலைக் கழகப் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து பொன் விழா நிகழ்வை நடத்தத் தீர்மானித்துள்ளனர். இதற்காக உருவாக்கப்பட்ட ஏற்பாட்டுக் குழுவின் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

பொன்விழா நிகழ்வுக்குப் புலம் பெயர்ந்தும், நாட்டிலும் உள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக பழைய மாணவர்கள், தொழில் துறை சார்ந்தவர்கள், அனைவரையும் வருகை தருமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி முதல் நாள் நிகழ்வு காலை 09 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது பொன் விழா தொடர்பான நூல் ஒன்று வெளியீடு செய்யப்படவுள்ளது.அதனைத்தொடர்ந்துகலைப்பீடத்தைச் சேர்ந்த மூத்த இளைப்பாறிய விரிவுரையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வாகக் கலைப்பீடத்தைச் சேர்ந்த பழைய மாணவர்களின் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதின் மென்பந்து, கரப்பந்து, உள்ளிட்ட விளையாட்டுக்களுக்கும் பாரம்பரிய உள்ளக, வெளியக விளையாட்டுகளும் இடம்பெறவுள்ளன.

இறுதி நாள் நிகழ்வாகப் பல்கலைக் கழகக் கலைப்பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து குருதிக் கொடை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அனைவருக்குமான இராப்போசன நிகழ்வும் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

இந்த நிகழ்வுக்காக ஏற்பாட்டுக் குழுவில் அங்கம் வகிக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரகுராம், பல்கலைக்கழகத்தின் மூத்த பழைய மாணவரும் பேராசிரியருமான கலாநிதி செல்லத்துரை சேதுராஜா, முன்னாள் பாடசாலை அதிபர் அருணாச்சலம் அகிலதாஸ், யாழ்ப்பாண பல்கலைக்கழக பழைய மாணவர் ஒன்றியத்தில் பொறுப்பாளர்களில் ஒருவரான மிதிலைச் செல்வி ஸ்ரீபத்மன் ஆகியோர், பொன்விழா நிகழ்வுக்கு அனைவரையும் வருகை தருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.